www.tamilarangam.net

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை




## தமிழ்க் கட்சிகளும் பிரேமதாசா அரசும்

யாழ்ப்பாணத்தில் தீவுப் பகுதிகளை வலம்புரி நடவடிக்கை மூலம் அரச துருப்புக்கள் கைப்பற்றின.

இந்த நடவடிக்கையின்போது தமிழ்க் குழுக்களின் உதவி பெறப்பட்டதாக அப்போது செய்திகள் வெளியாகின.

அரசு கேட்டிருக்குமானால் தமது உறுப்பினர்களை கொடுத்து உதவ தமிழ்க் கட்சிகள் தயாராகவே இருந்தன. எனினும் உதவி கோரப்படவில்லை.

தீவுப்பகுதியை முழுமையாக கைப்பற்றிய பின்னரே, அங்கு எந்த தமிழ்க் கட்சியை அனுப்புவது என்று பாதுகாப்பு அமைச்சு யோசித்தது.

அப்போது பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன உயிரோடு இருந்தார். ஈ.பி.டி.பி தீவுப்பகுதியில் தனித்து செயற்பட அனுமதிப்பது. ஏனைய இயக்கங்களை அங்கு செல்ல அனுமதிப்பதில்லை என்று ரஞ்சன் முடிவு செய்தார்.

புளொட், ரெலோ ஆகிய இயக்கங்கள் அப்போது வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பகுதியில் படையினருடன் இணைந்து செயற்பட்டு வந்தன. அதேசமயம் அவர்களது முகாம்கள் தனியாகவே இருந்தன.

ஆனால் ஈ.பி.டி.பிக்கு ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தை தனது நிர்வாகத்தில் வைத்திருக்கும் அளவுக்கு வாய்ப்புத் தரப்பட்டது.

தீவுப்பகுதியில் படை முகாம்கள் இருந்தபோதும், நிர்வாகத்திலோ, ஈ.பி.டி.பி.யினரின் செயற்பாடுகளிலோ தலையிட மாட்டார்கள் என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டது.

யாழ் குடாநாட்டில் ஈ.பி.டி.பி பொறுப்பாளராகவும், இராணுவத் தளபதியாகவும் மதன் (இரா மேஸ்வரன்) செயற்பட்டார்.

தீவுப்பகுதிகளில் ஈ.பி.டி.பி. யின் செயற்பாடுகளை ஸ்திரப்படுத் துவதில் மதன் முக்கிய பங்கு வகித்தி ருந்தார். நயினாதீவில் கடற்படை யினர் ஏற்கனவே இருந்தமையால், நயினா தீவு தவிர்ந்த ஏனைய தீவுப்பகுதிகள் அனைத் தும் ஈ.பி.டி.பி.யின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன.

தீவுப்பகுதியை ஈ.பி.டி.பி. பொறுப்பேற்ற பின்னர், ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி பிரேமதாசாவை அப்பகுதிக்கு விஜயம் செய்யுமாறு கேட்டிருந்தார்.

'அங்கு செல்வது பாதுகாப்புக்கு உகந்தது அல்ல' என்று கூறியபோதும், பிரேமதாசா கலந்து கொள்ள சம்மதித்தார்.

ஜனாதிபதி பிரேமதாசா, ரஞ்சன் விஜயரத்னா ஆகியோர் யாழ் தீவுப்பகுதிகளுக்கு சென்றனர். டக்ளஸ் தேவானந்தா தலைமையில் அங்கு நடைபெற்ற கூட்டங்களில் பங்குகொண்டனர்.

### அணுகுமுறை

பிரேமதாசா, ரஞ்சன் விஜயரத்னா ஆகியோர் உயிருடன் இருந்திருந்தாலும் இனப்பிரச்சனைக்கு நீதியான தீர்வொன்றை கண்டிருக்கப்போவதில்லை.

ஆனால், இந்தியப் படைக்கு எதிராக புலிகளுடனும், பின்னர் புலிகளுக்கு எதிராக ஏனைய தமிழ் அமைப்புக்களுடனும் பிரேமதாசா அரசு கொண்ட நட்பு, எதிரிக்கு எதிரி



நண்பன் என்ற தந்திரோபாயத்தின் அடிப்படையிலேயே இருந்தது.

ஆனாலும், சரியோ, தவறோ, ஒரு குறிப்பிட்ட வேலைத் திட்டத்தில் இணக்கம் கண்டு சேர்ந்து நின்றால், அத் தரப்புக்கள் இடையே பரஸ்பர மரியாதை இருக்க வேண்டும்.

இந்தியப் படை காலத்தில் பிரேமதாசா அரசு புலிகளோடு பேசியபோது அவர்களுக்குரிய மரியாதையை கொடுத்தது,

அதேபோல பின்னர் புலிகளுக்கு எதிரான ஏனைய தமிழ் அமைப்புக்களுக்கும் மரியாதை கிடைத்தது.

வடக்கு-கிழக்குக்கு ஜனாதிபதி பிரேமதாசா சென்றால், அங்குள்ள தமிழ்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை மேடையில் அமரவைத்துக் கொள்வார்.

எப்போது வேண்டுமானாலும் தமிழ்க் கட்சிகள் பிரேமதாசாவையோ, ரஞ்சனையோ சந்திக்க முடியும்.

வடக்கு-கிழக்கு தொடர்பான அரசியல் நடவடிக்கைகள் எதுவானாலும் தமக்கு ஆதரவான கட்சிகளின் தலைவர்களை அழைத்து முதலில் கருத்துக் கேட்கும் அணுகுமுறையும் பிரேமதாசாவிடம் இருந்தது.

ஜனாதிபதி டி.வி.விஜயதுங்கா மற்றும் தற்போது ஜனாதிபதி சந்திரிக்கா ஆகியோரின் ஆட்சிகளது அணுகுமுறைகள் நேர் மாறாக காணப்பட்டன. காணப்படுகின்றன.

தமிழ்க் கட்சிகள் கூறும் எக் கருத்தையும் ஆட்சியாளர்கள் ஏற்கமாட்டார்கள். ஆட்சியாளர்கள் கூறுவதை மட்டும் இக் கட்சிகள் ஏற்றுத் தலைமேல் கொண்டு செயற்பட வேண்டும்.

ஈ.பி.டி.பி., புளொட் ஈ.பி.ஆர்.எல்.எ.்ப். ஆகிய இயக்கங்கள் இன்று அரசை ஆதரிக்கின்றன. ரெலோ படையினருடன் நிற்கிறது. இவற்றின் முக்கிய தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்திக்க சென்றால்கூட, உடல் முழுவதும் தடவி சோதனையிட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றனர்.

ஆனால் பிரேமதாசாவை அவரது சுற்சரித்த இல்லத்தில் சந்தித்த தமிழ்க் கட்சித் தலைவர்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதில்லை.

டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் போன்றோரை அவர்கள் யார் என்று சோதனை போடுகிறவர்களுக்கே தெரியும். பின்னர் எதற்கு சந்தேகப்படுகிறார்கள்? இது பற்றி ஈ.பி.டி.பி. தலைவர் ஜனாதிபதியிடமே நேரில் புகார் செய்திருந்தார். "அப்படியா?" என்று ஜனாதிபதி ஆச்சரியப்பட்டாராம். ஆனால் நடைமுறையில் மாற்றமில்லை. அதேசமயம் அமைச்சர்கள் போன்றோர் சோதனையிடப்படுவதில்லை.

1991இல் ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ ஆகிய கட்சிகள் தமது அரச ஆதரவையோ, புலிகளுக்கு எதிராக அரசுடன் ஒத்துழைப்பதையோ மறைக்கவில்லை. பகிரங்கமாகக் கூறின.

அரசைப் போற்றுவதிலும் போட்டி போட்டன. புலிகளை கடுமையாக கண்டிப்பது யார்? புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபடுவது யார்? என்று ஈ.பி.டி.பி., புளொட், ரெலோ ஆகிய இயக்கங்கள் மத்தியில் போட்டியே நிலவியது.

ஆனால் இப்போது எந்தவொரு தமிழ்க் கட்சியும் தாம் அரசை நம்புவதாக கூறுவதில்லை. புலிகளுக்கு எதிராக தாம் படையினருக்கு வழங்கும் உதவிகளைப் பற்றி கூறுவதற்கும் வெட்கப்படுகின்றன.

1991இல் தென்னிலங்கை உள்ளூராட்சித் தேர்தலில் ஈ.பி.டி.பி, புளொட், ஆகிய கட்சிகள் ஐ.தே.கட்சியை ஆதரித் தன.

ஐ.தே.கட்சிக்கு வெற்றி தேடித் தந்த மக்களுக்கு நன்றி தெரிவித்து ஈ.பி.டி.பி, புளொட் ஆகியன நாட்டு மக்க ளுக்கு நன்றி தெரிவித்தன.

ஆனால் தற்போது எக் கட்சியும் அவ்வாறு அறிக்கை விட முடியாத நிலையில்தான் உள்ளன.

பிரேமதாசா ஆட்சிக் காலத்தில் அரசை தமிழ் கட்சிகள் ஆதரித்ததால் தமிழ் மக்களுக்கு நன்மை ஒன்றும் கிடைத்துவிடவில்லை. ஆனால் அக்கட்சிகளுக்கு ஓரளவு மரியாதை இருந்தது. இப்போது அரசை ஆதரிக்கும் கட்சிகளுக்கு அதுவும் கிடையாது.

தொடரின் இடையே இது போன்ற சுட்டிக் காட்டல்களும் அவசியப்படுவதால், வெகு தூரம் முன்னால் ஓடிவந்துவிட்டு, திரும்பிச்செல்ல வேண்டியிருக்கிறது. இப்போது மறுபடி பின்னால் செல்லுவோம்.

## வேண்டப்படாதவரான பிரிட்டிஷ் தூதர்

### வெளியேற்றம்

1991 மே மாதம் 11ம் திகதி உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற்றன. இத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியினர் வன்முறைகளில் ஈடுபட்டனர்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியினரும், ஆதரவாளர்களும் தேர்தல் வன்முறைகள் தொடர்பாக முறையிட்ட வண்ணமிருந்தனர்.

அப்போது இலங்கைக்கான பிரிட்டிஷ் தூதராக இங்கு கடமையாற்றியவர் டேவிட் கிளாஸ்ரன். ஒல்லியான உடல்வாகு கொண்டவர். ஊதினால் பறந்து விடுவார் போன்ற தோற்றம்.

உள்ளூராட்சித் தேர்தல் நிலவரத்தை ஆராயத் தலைப்பட்டார் கிளாஸ்ரன்.

உள்ளூராட்சித் தேர்தலில் ஐ.தே.கட்சி ஆட்சியாளரே வெற்றி பெற்றனர். கள்ளவாக்கு களை அள்ளி போட்டு குறுக்கு வழியில் வெற்றி பெற்றுவிட்டனர் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சி குற்றம், சாட்டியது.

தேர்தலில் முறைகேடுகள் நடந்துள்ளன என்று பிரிட்டிஷ் தூதர் டேவிட் கிளாஸ்ரனும் கருத்துக் கூறிவிட்டார். பிரேமதாசாவுக்கு சுள்ளென்று ஏறியது கோபம்.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் செலவுக்கும் சில பெட்டிகள் கைமாறியதாக ஒரு தகவலும் பிரேமதாசாவுக்கு யார் மூலமோ எட்டிவிட்டது.

அமைச்சர்கள் உட்பட பலர் தடுத்தும் கேளாமல், கிளாஸ்டன்மீது தன் கோபத்தைக் காட்டினார் பிரேமதாசா.

கிளாஸ்ரன் 'வேண்டப்படாதவர்' என்று அறிவித்தது அரசாங்கம். ஒரு தூதருக்கு இது மிகப் பெரிய அவமானம். பிரிட்டனுக்கும் அடிதான்.

இதனால் பிரிட்டன் தனது அதிருப்தியை வெளிப்படையாக காட்டிக்கொண்டது. பிரிட்டிஷ் பிரதமரால், ஜனாதிபதி பிரேமதாசாவுக்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டது.

"டேவிட் கிளாஸ்ரனுக்கு எதிரான நடவடிக்கை முற்றிலும் நியாயமற்றது." என்று பிரிட்டிஷ் பிரதமர் தெரிவித்திருந்தார்.

எனினும் டேவிட் கிளாஸ்ரன் தொடர்ந்து இலங்கையில் பணியாற்ற முடியவில்லை. வெளியேறினார். நான்கு வருடங்கள் அவர் தூதராக இருந்தார்.

பிரிட்டிஷ் பொதுநலவாயநாடுகளது பாராளுமன்ற செயலாளர் திரு. லென்க் பொயிட் இலங்கைக்கு விஜயம் செய்ய இருந்தார். கிளாஸ்ரன் விடயத்தில் இலங்கை அரசின் நடவடிக்கையை கண்டிக்கும் முகமாக அவரது விஜயம் ஒத்திவைக்கப்பட்டது.

இலங்கை அரசுடனான உறவு பற்றியும், இலங்கை அரசுக்கான நிதி உதவி பற்றியும் மீள்பரிசீலனை செய்யப்போவதாகவும் பிரிட்டன் மிரட்டியது.

என்றாலும் பின்னர் படிப்படியாக ஓரளவு உறவு சுமுகமானது.

அடுத்தவாரம் அதிரடியான தகவல்களோடு சந்திப்போம்.

*(தொடர்ந்து வரும்)*

---

## வைரவர் கோயிலுக்குள் தயாரான குண்டு

இது சன்சோனிக் கமிஷன் சமர்ப்பித்த இறுதி அறிக்கையில் இருந்து திரட்டப்பட்ட முக்கிய விவரங்கள். இவற்றில் சேனாதி ராஜா என்பது மாவை சேனாதிராஜாவையும் (இன்று கூட்டணித் தலைவர்களில் ஒருவர்) சத்தியசீலன் என்பது தமிழ் மாணவர் பேரவைத் தலைவராக இருந்த பொன்-சத்யசீலனையும், ஆனந்த விநாயகம் என்பது வண்ணை ஆனந்தனையும் குறிக்கும்.

சத்தியசீலன் தமது ஒப்புதல் வாக்கு மூலத்தில் திரு.சி. குமாரசூரியன்மீது கைக்குண்டு வீசும் ஒரு சதியாலோசனை பற்றிக் குறிப்பிட்டார். 1972, பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி நடைபெறவிருந்த இச்செயல், அன்னார் பாராளு மன்றத்தின் ஓர் உறுப்பினராக நியமிக்கப்பெற்றமையைப் பாராட்டி நடக்கவிருந்த வரவேற்புபசாரமொன்றிற்கு அன்னார் சமூகமளிக்கும் தருணத்திற்கெனக் குறிக்கப்பட்டு இருந்தது.

இவ்வாலோசனையை அவர் முன் வைத்த சேனாதிராசா என்பவரிடமிருந்து அவர் இருபத்தைந்து (ரூபா 25/-) பெற்றார். சோதிலிங்கம் எனும் ஒருவருக்கு இவ் வெண்ணத்தை அவர் தெரிவிக்கவே, குண்டுகளைத் தயாரிக்க அந்நபர் ஒருப்பட்டதோடு, அந்நோக்கத்திற்கு வேண்டிய பொருட்களைக் கொள்வனவு செய்யும் பொருட்டுப் பத்து ரூபா (ரூ.10/-) கேட்டுப் பெற்றுக்கொண்டார்.

### கோவிலில்

குண்டுகளைத் தயாரித்ததற்கு ஓரிடம் காணப்பெறவேண்டி இருந்தது; இதற்காக, மதியாபரணத்தின் துணைநாடி அவரது வீட்டிற்குத் தானும் சிவராஜா எனும் ஒருவரும் சென்றதாகச் சத்தியசீலன் கூறினார். பெப்ரவரி மாதம் 12ஆம் திகதியன்று காலையில் குண்டுகளைத் தயாரிப்பதற்கெனத் திட்டமிடப்பட்டது; ஏனெனில், குருநகரில் அதேநாளன்று அக்கூட்டம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

இதற்கேற்ற இடம் கொண்டலடி வைரவர் கோவில் என மதியாபரணம் யோசனை தெரிவித்ததுடன், அக்கோவில் மடைப் பள்ளியின் திறவுகோல் தம்வசமிருந்ததாகவும் அவர் உரைத்தார்.

சத்தியசீலனின் வாக்குமூலப்படிக்கு, கூட்ட நாளன்று காலை, அவரும், ராஜகுல சூரியரும் குவேந்திரராஜாவும், குண்டுகளைத் தயாரிக்கவிருந்த இன்னும் இருவரும் (02 பேரும்) அக்கோவிலுக்குப் போயினர்; குண்டுகளைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருட்கள் பிரம்புக்கூடையொன்றினுட் கொண்டு செல்லப்பட்டது.

அங்கே மதியாபரணம்,



மாவை சேனாதிராஜா

சிவராஜா, சோதிலிங்கம் ஆகியோரைக் கண்டதாக அவர் உரைத்தார். மடைப்பள்ளி திறந்திருந்தது; குண்டு தயாரிப்பு ஆட்கள் கூடையையுங்கொண்டு உள்ளே புகுந்தனர்; சத்தியசீலன், மதியாபரணம், சோதிலிங்கம் ஆகியோர் கோவில் நூல் நிலையத்தினுள் இருந்தனர்.

சிறிது நேரமாகியதும் அவ்விடத்தை நோக்கி "அவர்களைப் பிடியுங்கள், அவர்களைப் பிடியுங்கள்!" எனக் கூக்குரலிட்டவாறு ஏழு எட்டுப்பேர் அவ்விடத்திற்கு ஓடிவரவே, சோதிலிங்கம், மதியாபரணம், சத்தியசீலன் முதலானோர் ஓடித் தப்பித்துக் கொண்டனர்.

இச்சதியில் குவேந்திரராஜாவுக்குள்ள தொடர்பிற்குத் திரு. இராஜகுலசூரியர் சான்று பகர்ந்துள்ளார். இது சம்பந்தமாகத் திரு. இராஜகுலசூரியர் 1972, ஜூலை மாதம் 09ஆம் திகதியன்று யாழ்ப்பாணம் நீதவானுக்கு நல்கிய வாக்குமூலம் ஈண்டு முன்னிலைப்படுத்தப் பெற்றுள்ளது.

அவ்வாக்குமூலத்தின்படிக்கு, குவேந்திர ராஜா, 1972, பெப்ரவரி மாதம்12ஆம் திகதியன்று மாலை குருநகரில் நடைபெறவிருந்த ஒரு கூட்டத்தில் திரு. குமாரசூரியர்மீது குண்டுகள் வீசப்படவுள்ள உத்தேசம் பற்றி இராஜகுல சூரியரிடம் தெரிவித்தார். அவர் 12 ஆம் திகதியன்று காலை இராஜகுலசூரியரைச் சத்தியசீலனுக்கு அறிமுகஞ் செய்தும் வைத்தார்; "இப்பணியைப் பொறுப்பேற்க ஆயத்தமா" என இராஜகுல சூரியரிடம் சத்தியசீலன் வினவியபோது, அவர் அதற்கு உடன்பட்டுக்கொண்டார்.

1972, ஜூலை மாதம் 10ஆம் திகதியன்று யாழ்ப்பாண நீதவானுக்கு எம். மதியாபரணம் கொடுத்த வாக்குமூலம் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது. கே. சிவராஜாவினால் அழைத்துவரப்பெற்ற சத்தியசீலனை 1972, பெப்ரவரி மாதம் 11ஆம் திகதியன்று தாம் சந்தித்தார் என அவர் குறிப்பிட்டார். சத்தியசீலன் எதையோ ஒன்றைக் கொண்டலடி வைரவர் கோவில் மடைப்பள்ளியினுள் வைத்தற்பொருட்டு அதன் திறப்பைத் தம்மிடம் கேட்டார் எனவும், தாம் அதற்கு உடன்பட்டார் எனவும் அவர் கூறினார்.

முன்உடன்பாட்டின்படி 12ஆம் திகதி காலையில் அவர்கள் கோவில் நூல்நிலையத்திற் சந்தித்தனர் எனவும், சத்தியசீலனிடம் தாம் சாவியைக் கொடுத்தார் எனவும் அவர் மேலும் இயம்பினார்.

அதன்பின்னர், கோவிலுக்கு வெளியே சத்தியசீலன், குவேந்திரராஜா, மதியாபரணம் ஆகியோர் ஒருவரோடொருவர் கதைத்துக் கொண்டிருந்தவேளை, குருநகர்க் கூட்டத்தில் மின்சாரக்கம்பியை வெட்டிவிடும் வண்ணம் குவேந்திரராஜாவிடம் சத்தியசீலன் கூறினார்: தாம் (அதாவது சத்தியசீலன்) காரொன்றையும், கூட்டமேடைமீது குண்டுவீச ஆளொருவரையும் ஏற்பாடு செய்து உதவுவார் எனவும், கூறினார்.

அத்தகைய நடத்தைக்கு மதியாபரணம் எதிருரை கூறியபோதும் சத்தியசீலன் அவரை மிரட்டவே, அவர் களுடன் சேர்ந்துகொள்ள அவர் உடன்பட்டார். அவ்வாக்குமூலத்தில் எஞ்சியன பற்றி நான் குறிப்பிட வேண்டியதில்லை.

கைக்குண்டுகள் தயாரித்ததற்கும், 1972 பெப்ரவரி மாதம் 12ஆம் திகதியன்று குருநகரிற் கூட்டமொன்றிற்கு திரு. சி. குமாரசூரியர் சமூகமளித்தபோது, அவர்மீது அக்கைக்குண்டுகளை வீசுவதற்கும், சத்தியசீலன், இராஜகுலசூரி யர், மதியாபரணம் என்போர்க்கிடையில் ஒரு சதியாலோசனை நடைபெற்றமை தெளிவாகின்றது.

### துக்கதினம்

குற்றத்தை ஒப்புக்கொண்டு பெப்ரவரி 28ம் திகதியன்று சத்தியசீலன் கொடுத்த வாக்குமூலத்தின் கண் அவர் குறிப்பிட்ட இன்னுமொரு சதியாலோசனை உண்டு.

முறிகண்டியில் நிறுவப்பட்டுள்ள உயர் அழுத்த மின்கோபுரங்களுக்குப் பழுது விளைவித்தலே அதன் நோக்கமாக இருந்தது. அவர், 1972, மே மாதம் 20ஆம் திகதியன்று நீராவியடியிலுள்ள மணியம் வீட்டிற்குச் சென்றிருந்தார் என உரைத்தார். அங்கே காசி ஆனந்தன், ஆனந்தவிநாயகம், சேனாதிராஜா, அமரசிங்கம், ஜெயம், மணியம் ஆகியோரைச் சந்தித்தார். ஆனந்தவிநாயகம், 22ஆம் திகதி துக்க தினமாக அனுஷ்டிக்கப் பெறல் வேண்டும் என அங்குவைத்துக் கூறினார்.

ஆகவே குடியரசு தினத்தன்று யாழ்ப்பாணக் குடாநாட்டினை இருளில் மூழ்கவைத்தல் வேண்டும் எனவும் அவர் மேலும் சொன்னார். சமூகமாக இருந்த அனைவரும் அவரது கூற்றுக்கு ஏகமனதாக உடன்பட்டனர். மின்சாரச் சபையின் ஒருமுன்னைநாள் ஊழியராகிய ஜெயம் அதனைக் கவனித்துக்கொள்வார் என மணியம் இயம்பினார்.

21 ஆம் திகதியன்று மணியம் வீட்டிற்குத் தாம் சென்றார் எனவும், அங்கு மணியமும் ஆனந்த விநாயகமும் நின்றனர் எனவும் சத்தியசீலன் குறிப்பிட்டார். ஜெயம் "ஸ்பனர்" கள் கொணர்ந்தார். வெளியே சென்ற மணியம், இராசலிங்கம் செலுத்திவந்த காரொன்றினைக் கொண்டுவந்தார்.

பி.ப. 2.00 மணியளவில் புறப்பட்ட இந்த ஐவரும் (05) வழியில் அமரசிங்கத்தை ஏற்றிக் கொண்டு போயினர். மாங்குளம் சந்தியிலிருந்து இரண்டு (02) மைல்கள் தொலைவிலுள்ள ஓரிடம்வரை காரைச் செலுத்திச் சென்ற அவர்கள், மோட்டார் காரினுள் இராஜலிங்கத்தை விட்டதன்பின், மின்கோபுரங்களுக்குக் கால்நடையாகப் போனார்கள்.

ஜெயமும், மணியமும் புரிஆணிகளையும் சம்பந்தப்பட்ட பாகங்களையும் மூன்று (03)கோபுரங்களினின்றும் கழற்றினராயினும், அவற்றுள் ஒன்றினின்றும் சில ஆணிகள், பாகங்கள் முதலியவற்றையே அவர்களாற் கழற்றமுடிந்தது. கோபுரங்கள் சாய்ந்து விழவில்லை.

காருக்கு மீண்ட அவர்கள் யாழ்ப்பாணத்திற்குக் காரில் மீண்டனர். மின்கோபுரங்கள் பொறிந்து வீழ்ந்துவிட்டன எனப் புதினப்பத்திரிகைகள் வாயிலாக அதன்பின்னர் அவர் அறிந்தனர்.



வாரமலர் தினமுரசு

ஜன.24–30,1999

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்